# உமா வாசகம்

3



OFFICE OF ... REGISTRAR OF BOOKS
28 SEP 1954
MADRAS
830
3-54

...ன் கம்பெனி, சென்னை 18

TB
031(37)
N54
147809.

# உமா வாசகம்

## மூன்றாம் புத்தகம்

1939-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பாடத்திட்டத்தின்படி
எழுதப்பெற்றது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1954
MADRAS

ஆசிரியர் :
த. சே. உமாபதி, M.A., L.T., (Dip-in-Geog.)
தலைமையாசிரியர்,
ஸி. அப்துல் ஹக்கீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

பதிப்பாசிரியர் :
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

உமாதேவன் கம்பெனி,
109-c, மவுண்டு ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-18.
1954

பதிப்புரிமை]

[விலை அணா 9

முதற்பதிப்பு : 1949
மறு பதிப்புக்கள் : 1950, 1951, 1952, 1953, (3 முறை), 1954
திருத்திய பதிப்பு : 1954

600 008
147809.

PRINTED AT THE JUPITER PRESS LTD., MADRAS-18.

# திருத்தப் பதிப்பின் முகவுரை

1939-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்டுள்ள பாடத் திட்டத்தையொட்டி எழுதப்பெற்ற இந்நூல் முதன்முதல் 1949-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இப்போது இது, பாட புத்தகங்கள் சம்பந்தமாக அரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள புது விதிகளுக்கிணங்கத் திருத்தங்கள் பல செய்து வெளியிடப்படுகிறது.

இத்திருத்தப் பதிப்பு வெளியிடுவதில் எமக்குத் துணையாயிருந்து, ஏடுகளைப் பரிசோதித்து உதவிய நண்பர் திருவாளர் **வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்களுக்கு எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்நூலின் முன் பதிப்புக்கள் போலவே இப்பதிப்பும் தமிழ் நாட்டு ஆசிரிய அறிஞரின் மதிப்புக்குரியதாகும் என்று நம்புகிறோம்.

பிரசுரகர்த்தர்

# முதற் பதிப்பின் முகவுரை

'உமா வாசகம்' என்னும் பெயருடன் வெளிப்போதரும் நூல் வரிசையில் இது மூன்றும் புத்தகம்; 1939-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத்திட்டத்தின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; அத்திட்டத்தை முற்றிலும் தழுவி இயற்றப் பெற்றது; ஆசிரியரின் நீண்ட கால அனுபவத்தால் குழந்தை உள்ளத்தின் நிலையறிந்து எழுதப் பெற்றது.

குழந்தைகளின் கண்களைக் கவரும் படங்களும், கருத்தைக் கவரும் பாட்டுக்களும், மனத்தை மகிழ்விக்கும் விளையாட்டுக்களும், மொழியறிவை வளர்க்கத்தக்க பயிற்சிகளும் இந்நூலின்கண் நிரம்ப இடம் பெற்றுள்ளன. பட்டணங்களிலும் கிராமங்களிலும் உள்ள எல்லாக் குழந்தைகளும் எளிதில் அறியக் கூடிய புதிய சொற்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன.

மேனாட்டு நூல்களையொப்ப இஃது எல்லாச் சிறப்புக்களும் நிறைந்து விளங்க வேண்டுமென்பது ஆசிரியரின் ஆவல். இதன் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் எவர்க்கும் இஃது எளிதில் புலனாம்.

இந்நூல் அச்சாகுங்கால் ஏடுகளைப் பரிசோதித்து, இன்றியமையாத திருத்தங்கள் செய்து உதவிய என் நண்பர் திருவாளர் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கட்கு என் உளமார்ந்த நன்றி உரியது. தமிழ் நாட்டுக் குழந்தைகள் இதனைப் படித்துப் பயனுறுதற்கு ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை வேண்டுகிறேன்.

சென்னை,
5—10—49.

து. சே. உமாபதி

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சிறுமியர் விளையாட்டு (பாட்டு) ... ... | 1 |
| 2. | ஊஞ்சல் (பாட்டு) ... ... | 2 |
| 3. | நல்ல பிள்ளை ... ... | 3 |
| 4. | மாடும் குதிரையும் ... ... | 5 |
| 5. | புரு ... ... | 7 |
| 6. | அறிவுள்ள ஆட்டுக்குட்டி ... ... | 10 |
| 7. | காலை (பாட்டு) ... ... | 12 |
| 8. | செடி முளைத்தல் ... ... | 14 |
| 9. | பாப்பா ஏன் அழுகிறாய்? ... ... | 16 |
| 10. | மகாபலி புரம் ... ... | 18 |
| | விளையாட்டு—1 ... ... | 21 |
| 11. | 'தகாத காரியத்தில் தலையிடக் கூடாது.' ... | 22 |
| 12. | உழவனும் வணிகனும் ... ... | 25 |
| 13. | நரியும் நாரையும் (கதைப் படம்) ... ... | 28 |
| 14. | வாழும் முறைமை (பாட்டு) ... ... | 29 |
| 15. | எல்லாரையும் மகிழச் செய்வது எளிதன்று. .... | 31 |
| | விளையாட்டு—2 ... ... | 35 |
| 16. | மலை ... ... | 36 |
| 17. | தகுந்த தண்டனை! ... ... | 39 |
| 18. | பழமொழிகள் ... ... | 42 |
| 19. | செந்தலைப் பறவை ... ... | 44 |
| 20. | சைக்கில் வண்டி (பாட்டு) ... ... | 46 |
| | விளையாட்டு—3 ... ... | 47 |
| 21. | தண்ணீரின் சுய சரிதை ... ... | 48 |

| எண் | பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 22. | நவராத்திரி | ... | ... | 51 |
| 23. | சுத்தம் | ... | ... | 54 |
| 24. | வீட்டு மிருகங்கள் | ... | ... | 57 |
| 25. | கிராம உத்தியோகஸ்தர்கள் | ... | ... | 61 |
| 26. | குரங்கும் சக்கிலியும் (கதைப் படம்) | ... | ... | 64 |
| 27. | இரயில் வண்டி (பாட்டு) | ... | ... | 65 |
| | விளையாட்டு—4 | ... | ... | 66 |
| 28. | காங்கோ நாட்டுக் குள்ளர்கள் | .... | ... | 67 |
| 29. | கை எழுத்து | ... | ... | 70 |
| 30. | இந்தியக் கவியரசியார் | ... | ... | 73 |
| | விளையாட்டு—5 | ... | ... | 76 |
| 31. | மகா பாரதம் | ... | ... | 77 |
| 32. | சித்தரஞ்சன தாசர் | ... | ... | 79 |
| 33. | எங்கள் வளநாடு (பாட்டு) | ... | ... | 82 |
| 34. | உழவு | ... | ... | 83 |
| 35. | நிலக்கடலை | ... | ... | 85 |
| 36. | புகழேந்திப் புலவர் | ... | ... | 87 |
| 37. | நான் யார்? (பாட்டு) | ... | ... | 91 |


செய்யுள் பாடங்கள்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆத்தி சூடி | ... | .... | 93 |
| 2. | கொன்றை வேந்தன் | ... | ... | 94 |
| 3. | வெற்றி வேற்கை | ... | ... | 95 |

புதிய சொல் பொருள் அகராதி



## 1. சிறுமியர் விளையாட்டு (பாட்டு)

ஆடிடு வோம்விளை யாடிடு வோம்தினம்
அன்பு பெருகவே ஆடிடுவோம்.
பாடியே காய்களை வீசிப்பி டித்துநாம்
பாங்காக அம்மானை ஆடிடுவோம். 1

கயிற்றைக் கரங்களால் பற்றிச் சுழற்றியே
கால்தடு மாறாமல் ஆடிடுவோம்.
குயிலெனப் பாடியே கூட்டமாய் நின்றுநாம்
கோல்அடித் தேவிளை யாடிடுவோம். 2

குனிந்து நிமிர்ந்துகை வீசிக் கரம்தட்டிக்
கும்மி யடித்துநாம் ஆடிடுவோம்.
தனித்தனி இருவராய்க் கரங்களைப் பற்றியே
தாட்டிக மாய்ச்சுற்றி ஆடிடுவோம். 3

கண்ணைத் துணியினால் கட்டி மறைத்துமே
கண்ணாம்பூச் சிவிளை யாடிடுவோம்.
வண்ண முடனே மரத்தில் கயிற்றினை
வரிந்து பிணித்தூஞ்சல் ஆடிடுவோம். 4





# 2. ஊஞ்சல்

1. ஆடுவோ மேஊஞ்சல் ஆடுவோமே
   ஆடைபறந் திடஊஞ்சல் ஆடுவோமே.
2. மரத்தின் கிளையினிலே ஊஞ்சல்கட்டி
   மகிழ்ச்சியாய்த் தள்ளிவிளை யாடுவோமே.
3. தலைமயிர் பறந்திட ஆடுவோமே
   தம்பியுடன் நாமும்இருந் தாடுவோமே.
4. காலைத் தரையினிலே ஊன்றித்தள்ளிக்
   களிப்புடனே ஏறிஅமர்ந் தாடுவோமே.
5. வீசிமிக வேகமாகக் காலையாட்டி
   விண்ணில்பறப் பதுபோல ஆடுவோமே.
6. இங்குமங்கும் வீசிவிளை யாடுவோமே
   இன்பமாகக் காற்றெழநாம் ஆடுவோமே.





## 3. நல்ல பிள்ளை

1. நேற்று என் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. நான் மூன்ரும் வகுப்புக்கு மாற்றப்பட்டேன்.

2. என் உடையைப் பார். இவை புதியவை. நான் மேல் வகுப்புக்கு மாறியதற்காக, என் தந்தையார் இவற்றை எனக்கு வாங்கித் தந்தார்.

3. என் பையில் இருப்பவை மூன்ரும் வகுப்புப் புத்தகங்கள். இவற்றையும் தந்தையாரே வாங்கிக் கொடுத்தார். ஒவ்வொரு புத்தகத்துக்கும் என் தமையனுர் அட்டை போட்டுத் தந்தார். நான் அவற்றில் என் பெயரை எழுதினேன்.

4. அட்டை போடாவிட்டால், புத்தகங்கள் அழுக்காகிவிடும். பெயர் எழுதாவிட்டால், புத்தகம் யாருடையது என்பது தெரியாது.

5. நான் என் புத்தகங்களில் கண்ட இடத்தில் எழுதுவது இல்லை. நான் எப்போதும் என் புத்தகங்-

களைப் பையில் இட்டு எடுத்துப் போவேன். அப்போது-தான் அவை அழுக்கு அடையாமலும், கிழியாமலும் இருக்கும்.

6. பள்ளிக்கூடச் சிறுவரும் சிறுமியரும் தம் புத்த-கங்களை அழுக்கு ஆக்காமலும், கிழியாமலும் வைத்துக்-கொள்ள வேண்டும்.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| நேற்று | இருப்பவை | இட்டு |
| மாற்று | அட்டை | எடுத்து |
| உடை(பெ) | உடையது | அப்போது |
| இவை | தெரியாது | கிழி |
| புதியவை | கண்ட | தம் |

## பயிற்சி :

1. எதிர்ப் பதம் எழுது :—

திறக்கப்பட்டது, புதியவை, வாங்கினர், சிறுவர்.

2. கீழுள்ளவற்றுள் தகுந்த சொல்லைக் கோடுள்ள இடத்தில் எழுது :—

[படிக்கிறான் — படிக்கிறாள்—படிக்கிறது—படிக்கிறார்கள் —படிக்கின்றன.]

(அ) இராமன் பாடம் ———.
(ஆ) சீதை பாடம் ———.
(இ) குழந்தை பாடம் ———.
(ஈ) பிள்ளைகள் பாடம் ———.
(உ) குழந்தைகள் பாடம் ———.

3. விடை எழுது :—

(அ) உன் புத்தகங்களை நீ எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் ?

(ஆ) நீ உன் புத்தகங்களைப் பள்ளிக்கூடத்துக்கு எப்படி எடுத்துச் செல்லுவாய் ?



## 4. மாடும் குதிரையும்

1. படத்தில் ஒரு மாடும், ஒரு குதிரையும் நிற்கின்றன. அவற்றைக் கவனித்துப் பார். மாட்டுக்குக் கொம்புகள் இருக்கின்றன. குதிரைக்குக் கொம்புகள் இல்லை.

2. குதிரையின் காதுகளைக் கவனி. அவைகள் நிமிர்ந்துள்ளன. மாட்டின் காதுகள் மடிந்திருக்கின்றன.

3. குதிரைக்குக் கழுத்தில் பிடரி மயிர் தொங்குகிறது. மாட்டுக்குப் பிடரி மயிர் இல்லை; ஆனால், கழுத்தின் கீழ்ப்பாகத்தில் திரை போன்ற தோல் தொங்குகிறது.

4. மாட்டின் முதுகில் முசுப்பு இருக்கிறது. குதிரைக்கு முசுப்பு இல்லை. மாட்டின் முகத்தைவிடக் குதிரையின் முகம் நீண்டிருக்கிறது.

5. அந்த மிருகங்களின் கால்களைக் கவனி. மாட்டின் குளம்புகள் பிளவுபட்டு இருக்கின்றன. குதிரையின் குளம்புகள் பிளவுபடவில்லை.





6. குதிரையின் வால் அடி முதல் மயிர் அடர்ந்திருக்கிறது. மாட்டின் வாலில் நுனியில் மட்டும் மயிர் இருக்கிறது. மாடு முட்டும்; குதிரை கடிக்கும்.

'கோம்பு உளதற்கு ஐந்து முழம்;
குதிரைக்குப் பத்து முழம்.'

### புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| நிமிர்ந்து | கீழ் | பிளவு |
| உள்ளன | பாகம் | நுனி |
| மடிந்து | திரை | கடி |
| பிடரி | தோல் | முழம் |
| | குளம்பு | |

### பயிற்சி :

1. கோடுள்ள இடங்களில் தகுந்த எழுத்துக்களை எழுது :—
   நி - கி - றன, நோ - கி, தொ - கு - றது, அ - ர் - து.
2. மாட்டுக்கும் குதிரைக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?
3. வினாக்களாக மாற்று :—
   (அ) மாடு முட்டும்.
   (ஆ) குதிரை கடிக்கும்.



# 5. புரு

1. புரு அழகிய பறவை. அது வீட்டு மாடங்களிலும், கோபுரங்களில் உள்ள மாடங்களிலும் வசிக்கும். ஆதலால், அதற்கு மாடப் புரு என்னும் பெயரும் வழங்குகிறது. புருவின் தலை அதன் உடலுக்கு ஏற்ற அளவு பெரிதாயிராது. புருக்களில் பல நிறம் உள்ளவை உண்டு.

2. புரு, கூரிய பார்வை உடையது. ஆதலால், அது அதிக உயரத்தில் பறந்தாலும், தன் கூட்டை அறிந்துகொள்ளும். புரு, பல மணி நேரம் ஓய்வு இன்றிப் பறக்கும் வல்லமை உடையது.

3. புருக்களில் பல வகை உண்டு: சில புருக்கள் அழகாக ஆடும். அவை ஆட்டப் புருக்கள் எனப்படும். சில புருக்கள் ஆகாயத்தில் பறக்கும் போது கரணம் அடிக்கும். அவை கரணப் புருக்கள் எனப்-

படும். சில அவ்வாறு செய்யா. அவை சாதாரணப் புறாக்கள் எனப்படும்.

4. சிலர் புறாக்களை வீடுகளில் வளர்க்கின்றனர். அவை தானிய வகைகளையும், பயற்று வகைகளையும் தின்னும். பழகிய புறா மனிதரைக் கண்டு பயப்படாது. புறா நின்றபடியே தூங்கும். தூங்கும் பொழுது ஒரு காலைத் தூக்கி வைத்துக்கொண்டே தூங்கும். அது தூங்கும் போது மூச்சு விடுவது மனிதர் குறட்டை விடுவது போலக் கேட்கும். புறா வெகு தூரம் பறக்கக் கூடியது. ஆதலால், முற்காலத்தில் பனை ஓலையில் செய்திகளை எழுதி, அவ்வோலையைப் புறாவின் காலில் கட்டி, அயல் ஊர்களுக்கு அனுப்புவது வழக்கம். இக்காலத்திலும் சில இடங்களில் அவ்வழக்கம் இருந்து வருகிறது.

5. காட்டில் வசிக்கும் புறாக்களும் உண்டு. அவை மணிப் புறாக்கள் எனப்படும். மாடப் புறாக்களைவிட மணிப் புறாக்கள் சிறியவை. அவை சாம்பல் நிறமாயிருக்கும். ஆண்களுக்குத் தலையிலும் சழுத்திலும் கரிய புள்ளிகள் இருக்கும். மணிப் புறாக்கள் புதர்களில் வசிக்கும் ; பூமியில் பள்ளம் பறித்து, முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். புறாவுக்குப் பகை இராசாளி.

## புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| அழகிய | கூரிய | கரணப் புறா | மணிப் புறா |
| மாடம் | பார்வை | பயறு | சாம்பல் |
| கோபுரம் | அறிந்துகொள் | பழகு | ஆண் |
| மாடப்புறா | ஓய்வு | தூங்கு | கரிய |
| ஏற்ற | இன்றி | மூச்சு | புள்ளி |
| அளவு | ஆட்டப் புறா | குறட்டை | புதர் |
| பெரிது | கரணம் | முற்காலம் | பள்ளம் |
| குஞ்சு | பொரி | இராசாளி | |

## பயிற்சி :

1. கீழே உள்ள சொற்களை அர்த்தம் தரும்படி வரிசைப் படுத்து :—

   (அ) புறா பறவை அழகிய

   (ஆ) கூரிய உடையது பார்வை புறா

   (இ) சாம்பல் அவை நிறமாய் இருக்கும்

2. புறாக்கள் எங்கே வசிக்கும் ?
3. 'கரணப் புறா' என்பது எதற்குப் பெயர் ?
4. நாட்டுப் புறாவுக்கு வழங்கும் வேறு பெயர் என்ன ?
5. புறா என்ன தின்னும் ?




# 6. அறிவுள்ள ஆட்டுக்குட்டி

1. அம்புஜம் என்பவள் அழகிய ஆட்டுக்குட்டி ஒன்றை வளர்த்து வந்தாள். அது அவளுடன் தினந்தோறும் பள்ளிக்கூடத்துக்குப் போகும். அம்புஜம் வகுப்புக்குள் போய்விட்டால், அது வெளியே படுத்திருக்கும். பள்ளிக்கூடம் முடிந்தவுடனே அது அவளுடன் வீட்டுக்குப் போகும்.

2. ஒரு நாள் ஆட்டுக்குட்டி பள்ளியின் பின் புறம் இருந்த தோட்டத்துக்குப் போயிற்று ; அங்குப் படுத்துத் தூங்கிவிட்டது.

3. பாடசாலை முடிந்தது. அம்புஜம் வெளியே வந்தாள். ஆட்டுக்குட்டி அங்கில்லை. அது வீட்டுக்குப் போய் இருக்கும் என்று அவள் நினைத்தாள் ; தான் மட்டும் வீட்டுக்குப் போனாள்.

4. ஆட்டுக்குட்டி தூங்கி விழித்தது ; எங்கும் இருண்டிருப்பதைக் கண்டது ; வேகமாய் வீட்டுக்குப் புறப்பட்டது. அது வழியில் ஒரு சாலையைக் கடக்க

நேரிட்டது. சாலையில் வண்டிகள் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தன.

5. ஆட்டுக்குட்டி சென்ற திசையில் வண்டிகளின் போக்கு வரவு ஓயவில்லை. ஆகவே, அது அசையாமல் நின்றது. போலீஸ் சேவகர் சைகை காட்டினார். வண்டிகள் குறுக்கிடவில்லை. ஆட்டுக்குட்டி முதலில் வலப்பக்கம் பார்த்தது; பிறகு இடப்பக்கம் பார்த்தது; 'இதுதான் சாலையைக் கடக்கச் சரியான நேரம்,' என்று எண்ணிக்கொண்டு சாலையின் குறுக்கே ஓடியது.

6. ஆட்டுக்குட்டியின் அறிவைப் பார்த்தாயா? நீயும் தெருவின் குறுக்கே போவதற்கு முன் ஆட்டுக்குட்டி செய்தது போல இரண்டு பக்கமும் கவனித்துப் போக வேண்டும்.

### புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| அறிவு | பின் புறம் | சாலை | அசையாமல் |
| படுத்து | எங்கும் | திசை | குறுக்கிடு |
| முடிந்தவுடன் | இருண்டு | போக்கு வரவு | வலப்பக்கம் |
| பள்ளி | வேகமாய் | ஓயவில்லை | இடப்பக்கம் |

### பயிற்சி :

1. கோடு இட்ட இடங்களில் தகுந்த சொல்லை அமைத்துப் படி :—

(அ) அம்புஜம் ——— ஆட்டுக்குட்டி ஒன்றை வளர்த்தாள்.

(ஆ) இதுவே சாலையைக் ——— சரியான நேரம்.

2. விளக்கு எரிந்தது.

பாலன் பந்தை எறிந்தான்.

எரிந்தது, எறிந்தான் என்னும் சொற்களில் ரி, றி என்னும் எழுத்துக்களைக் கவனி. அவற்றினால் அர்த்தம் வித்தியாசப்படுவதைக் கவனி.

3. சாலையின் குறுக்கே போவதற்கு முன் நீ என்ன செய்வாய்?



# 7. காலை (பாட்டு)

காலைக் கதிரவன் கீழைத் திசையிற்செங்
கதிரைப் பரப்பிக் கிளம்புகின்றான்;—இந்த
வேளை யுலகம் விழித்தெழுந் துநித்ய
வேலை தொடங்கிடும் விந்தையைப்பார்! 1

புள்ளும் விலங்கும் இருக்கைவிட் டெழுந்து
போவதைப் பாராய் இரைதேட;—நெஞ்சை
அள்ளும் அழகுடன் தாவர வர்க்கங்கள்
அணியணி யாகப் பொலிவதைப்பார்! 2

முன்றில்தோ றும்பெண்கள் கூட்டிச் சாணமிட்டு
முத்துப்போல் வெள்ளிய கோலமிட்டுப்—பின்
பொன்போற் குடங்கொண்டு தண்ணீர் எடுத்திடப்
போவதைப் பாராய்என் தோழனே நீ. 3

வீடுதோ றும்ஆண்கள் சோடியாய்க் காளைகள்
பூட்டி வயல்உழப் போவதைப்பார்!—மற்ற
ஆடுகள் மாடுகள் கட்டுத் தறிவிட்டே
அண்டையில் மேய்ந்திடச் செல்வதைப்பார்! 4

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| கதிரவன் | விலங்கு | பொலிவது |
| கீழைத்திசை | இருக்கை | முன்றில் |
| செங்கதிர் | தாவரம் | தோழன் |
| விந்தை | வர்க்கம் | சோடி |
| புள் | அணி அணியாக | காளை |
| கட்டுத்தறி | அண்டை | |

## பயிற்சி :

1. காலையிற்காணும் கிராமக் காட்சியை உன் சொந்த வாக்கியங்களால் விளக்கி எழுது.

2. எதிர்ச் சொல் எழுது :—

   காலை, கீழைத்திசை, விழித்து, தொடங்கு, போவது, அண்டையில்.

3. வாக்கியத்தைப் பூர்த்தி செய் :—

   (அ) கதிரவன் ——— கிளம்புகிறான்.

   (ஆ) புள்ளும் விலங்கும் ——— விட்டெழுந்து ——— பார்.

   (இ) தாவர ——— அணியணியாகப் ——— பார்.



# 8. செடி முளைத்தல்

1. விதை எப்படி முளைக்கிறது என்பது உனக்குத் தெரியுமா? படத்தைப் பார். முதலில் உள்ள இரண்டு விதைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஒரு விதை சிறிது பருத்தும், தோல் சிறிது பிரிந்தும், முளையோடும் காணப்படுகிறது. அவ்விதை தண்ணீரில் ஊறிய விதை. மற்றொன்று, தண்ணீரில் ஊறாத விதை.

2. ஊறிய விதையை ஒரு கத்தியால் பிளந்து பார். விதை இரண்டு பகுதிகளாகப் பிளவுபடும்; ஆனால், ஒரு புறத்தின் முனையில் சிறிது வெண்மையான வஸ்து ஒட்டிக்கொண்டிருக்கும். அந்தப் பாகத்திலேதான் விதைக்கு மிகவும் முக்கியமான பொருள் இருக்கிறது. அதுவே விதையின் முளை. அது உடைந்துவிட்டாலும், அழுகிவிட்டாலும் விதை முளையாது.

3. முளை மிகச் சிறியதாய் இருக்கிறது. அதுவே செடியாய் வளர்கிறது. விதையினால் அதற்கு என்ன உபயோகம்? செடிக்கு உணவு பூமியிலிருந்து கிடைக்-

கிறது. அந்த உணவைச் செடி வேர் மூலமாகப் பெறுகிறது. செடிக்கு வேர் உண்டாகும் வரையில் உணவு வேண்டும் அல்லவா ? அந்த உணவைச் செடி விதையிலிருந்தே பெறுகின்றது. அதனால், அதற்கு விதை இலை என்னும் பெயர் வழங்குகிறது.

4. மூன்றாவது விதையைப் பார். விதை முளைக்க ஆரம்பித்த உடனே முதலில் வேர்தான் தோன்றுகிறது என்பது தெரிகிறது அல்லவா ?

5. நான்காம் படத்தைக் கவனி. வேர் முளைத்துப் பூமியில் இறங்கிய பிறகுதான் இலை தோன்ற ஆரம்பிக்-கிறது என்பது தெரிகிறது.

6. விதையிலிருந்து முளைக்கும் எல்லாச் செடி வகைகளும் இப்படித்தான் முளைக்கின்றன. ஓர் அவரை விதையைப் பூமியில் ஊன்றி வைத்து, அது முளைக்கும் விதத்தைக் கவனித்துத் தெரிந்துகொள்.

### புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| முளைத்தல் | பிரிந்து | ஒரு புறம் | வேர் |
| விதை | முளை | ஒட்டிக்கொள் | ஆரம்பித்த |
| எப்படி | பிளந்து | உடைந்து | அல்லவா |
| வித்தியாசம் | பகுதி | அழுகி | இறங்கிய |
| பருத்து | பிளவுபடும் | முளையாது | ஊன்றி |
| | விதம் | | |

### பயிற்சி :

1. வாக்கியத்தைப் பூர்த்தி செய் :—

(அ) ஒரு கத்தியால் அதைப் .............

(ஆ) செடிக்கு உணவு பூமியில் .............

(இ) அதனால் இதற்கு விதை இலை .............

2. விதையில் உள்ள எந்தப் பாகம் முளைக்கிறது ?

3. செடி எப்படி உணவைப் பெறுகிறது ?

4. செடி முளைக்க ஆரம்பித்த போது முதலில் இலை தோன்றுகிறதா, வேர் தோன்றுகிறதா ?

# 9. பாப்பா ஏன் அழுகிறாய்?



பாப்பா, நீ ஏன் அழுகிறாய்?
எனக்குப் பால் கிடைக்கவில்லை.

பால் ஏன் கிடைக்கவில்லை?
பசு, பால் கறக்கவில்லை.



பசுவே, நீ ஏன் பால் கறக்கவில்லை?
புல் முளைத்தால் அதைத் தின்று
பால் தருவேன்;
புல் முளைக்கவில்லையே!



புல்லே, நீ ஏன் முளைக்கவில்லை?
மழை பெய்யவில்லையே!



மழையே, நீ ஏன் பெய்யவில்லை?
மேகம் தோன்றவில்லையே!



மேகமே, நீ ஏன் தோன்றவில்லை?
சூரியன் காயவில்லையே!



சூரியனே, நீ ஏன் காயவில்லை?
சேவல் கூவவில்லையே!



சேவலே, நீ ஏன் கூவவில்லை?
பையன் தீனி போடவில்லையே!



பையா, நீ ஏன் தீனி போடவில்லை?
சோம்பல் ஒழியவில்லையே!



இந்த அடியை வாங்கிக்கொள்;
உன் சோம்பல் பறந்து ஓடும்.

பையன் சுறுசுறுப்பாய் எழுந்து தீனி போட்டான்.
சேவல் 'கோக்கரக்கோ!' என்று கூவியது.
சூரியன் கரகர என்று புறப்பட்டது.
மேகம் தடதட என்று எழுந்தது.
மழை படபட என்று பெய்தது.
புல் கொழுகொழு என்று வளர்ந்தது.
பசு, புல்லைப் பரபர என்று மேய்ந்து பால்
கொடுத்தது.



பாலைக் குடித்துப் பாப்பா கடகட
என்று சிரித்தது.
பாப்பா சிரிப்பதைப் பார்!

பயிற்சி:

1. வாக்கியங்களைப் பூர்த்தி செய்: —
   (அ) ——— தளதள என்று கொதித்தது.
   (ஆ) ——— பளபள என்று பிரகாசித்தது.
   (இ) ——— குடுகுடு என்று ஓடினான்.
2. தளதள, பளபள என்பவை போல வேறு இரட்டைச் சொற்கள் மூன்று சொல்லு.
3. சேவல் ஏன் கூவவில்லை?
4. பாப்பா எப்படிச் சிரித்தது?



## 10. மகாபலி புரம்

1. நெடுங்காலத்துக்கு முன் நம் தமிழ் நாட்டில் ஓர் அரச வமிசத்தார் ஆண்டு வந்தனர். அவர் பல்லவர் எனப்பட்டனர். பல்லவர்களின் தலைநகரம் காஞ்சீபுரம். மகாபலி புரம் என்பது அவர்கள் துறைமுகப்பட்டினம்.

2. பல்லவ வமிசத்து அரசருள் மிகச் சிறந்தவர் நரசிம்ம வர்மர் என்னும் அரசர். அவர் பல அரசர்களைச் சண்டையில் தோற்கடித்தார். ஆதலால், அவருக்கு மாமல்லர் என்னும் பட்டப்பெயர் வழங்கலாயிற்று. அந்தப் பெயரால் பல்லவர்களின் துறைமுகப்பட்டினம் மாமல்ல புரம் என்று வழங்கப்பட்டது. இக்காலத்தில் அது மகாபலி புரம் என்று வழங்கப்படுகிறது.

3. மகாபலி புரத்தில் நரசிம்ம வர்மர் கருங்கல் பாறைகளைக் குடைவித்துக் கோவில்களைச் செய்வித்தார்.

அவற்றைப் படத்தில் பார். அந்தக் கோவில்கள் சிறந்த வேலைப்பாடு உடையவை. அவற்றைப் பாண்டவ ரதங்-கள் என்று வழங்குகிறார்கள். நம் நாட்டைக் காண வரும் அயல் நாட்டார் அந்தக் கற்கோவில்களைப் பார்க்காமல் போவதில்லை.

4. மகாபலி புரக் கடற்கரை ஓரத்தில் ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அதுவும் அழகிய வேலைப்பாடு



நிறைந்தது. ஆனால், அது இப்போது சிறிது சிறிதாகக் கடலில் அமிழ்ந்து வருகிறது.

5. மகாபலி புரத்தில் கற்பாறைகளில் செதுக்கப்-பட்ட அழகிய உருவங்கள் பல இருக்கின்றன. நேரில் பார்த்தால்தான் அவற்றின் பெருமை தெரியும். அவை நம் முன்னோருடைய அறிவையும் திறமையையும் வெளிப்படுத்துகின்றன. நீயும் அவற்றைப் பார்ப்பது அவசியமாகும்.

## புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வமிசத்தார் | தோற்கடி | வேலைப்பாடு | அமிழ்ந்து |
| ஆண்டு | மா(பெரிய) | ரதம் | செதுக்கப்பட்ட |
| தலை நகரம் | மல்லர் | நாட்டார் | உருவம் |
| துறைமுகம் | பட்டப்பெயர் | கடற்கரை | நேரில் |
| வமிசம் | கருங்கல் | ஓரம் | பெருமை |
| சிறந்தவர் | குடைவித்து | நிறைந்தது | முன்னோர் |
| சண்டை | செய்வி | கடல் | திறமை |

வெளிப்படுத்து அவசியம்

### பயிற்சி :

1. சரியா தவறா என்பதைச் சொல் :—

(அ) நரசிம்ம வர்மருக்கு 'மாமல்லர்' என்பது பட்டப் பெயர்.

(ஆ) அவருடைய தலை நகரம் மகாபலி புரம்.

(இ) நரசிம்ம வர்மர் செங்கல்லால் கோவில்கள் கட்டினார்.

(ஈ) மகாபலி புரக் கற்கோவில்கள் **பாண்டவ ரதங்கள்** எனப்படும்.

2. விடை எழுது :—

(அ) பல்லவ மன்னர்களின் தலை நகரமும் துறைமுகமும் எவை ?

(ஆ) பல்லவ மன்னர்களுள் சிறந்தவர் யார் ? அவருக்கு வழங்கி வந்த பட்டப்பெயர் என்ன ?

(இ) 'பாண்டவ ரதங்கள்' என்பவை யாவை ? அவற்றைச் செய்வித்தவர் யார் ?

(ஈ) மகாபலி புரத்துக் கோவில்களால் நாம் அறிவது யாது ?

(உ) மகாபலி புரம் எங்கே இருக்கிறது ?

# விளையாட்டு—1

வீட்டுப் பொருள்களையும் காட்டுப் பொருள்களையும் தனித்தனி எழுது :—



# 11. 'தகாத காரியத்தில் தலையிடக் கூடாது.'

1. ஒரு வீட்டில் ஒரு கழுதையும், ஒரு நாயும் இருந்தன. கழுதை மூட்டை தூக்கிச் செல்லும். நாய் தினந்தோறும் இரவில் வீட்டைச் சுற்றி வந்து காவல் காக்கும். சில சமயங்களில் அது இரவு முழுவதும் குரைக்கும்.



2. அந்த வீட்டு எஜமானி நாயினிடம் மிகவும் பிரியமாயிருந்தாள். அவள் அதற்கு நல்ல உணவு தருவாள். கழுதை அதைக் கண்டு பொறாமைப்பட்டது; தானும் நாயைப் போல எஜமானியின் பிரியத்தைப் பெற விரும்பியது; அதற்கு என்ன செய்வது என்று யோசித்தது.



3. ஒரு நாள் இரவு கழுதை மிகவும் முயன்று தன்னைக்கட்டியிருந்தகயிற்றை அறுத்துக்கொண்டது. நாய் வீட்டைச் சுற்றி வந்து குரைப்பது வழக்கம் அல்லவா? அதுபோலக் கழுதையும் கத்திக்கொண்டே வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓட ஆரம்பித்தது.



4. அது கேட்ட எஜமானி வெளியில் வந்து பார்த்தாள்; கழுதை கத்திக்கொண்டு வீட்டைச் சுற்றி ஓடுவதைக் கண்டாள். அதற்குக் காரணம் என்ன என்பது அவளுக்கு விளங்கவில்லை. அவள், 'கழுதைக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது,' என்று எண்ணினுள்.





5. அவள் வேலைக்காரனைக் கூப்பிட்டாள். அவன் ஓடி வந்தான். எஜமானி, கழுதையைப் பிடித்துக் கட்டி நன்ருக அடிக்கச் சொன்னுள். அவன் அவ்வாறே செய்தான்.

6. கழுதை மனம் வருந்தியது. "நான் நன்மையே செய்ய எண்ணினேன். துன்பம் வந்து சேர்ந்தது. பிறர் காரியத்தை நான் செய்ய நினைத்தது தவறு; 'தகாத காரியத்தில் தலையிடக் கூடாது,' என்று சொல்லித் துக்கித்தது.



புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| தகாத | சமயம் | கட்டியிருந்த | அடிக்க |
| காரியம் | எஜமானி | அறுத்துக்கொள் | அவ்வாறு |
| தலையிடு | பொருமை | கேட்ட | மனம் |
| சுற்றி | யோசி | விளங்கவில்லை | வருந்து |
| காவல் | முயன்று | பைத்தியம் | நன்மை |
| பிறர் | தவறு | துக்கித்து | |

### பயிற்சி :

1. சொற்களில் எழுத்துக்கள் மாறுவதால் பொருள் மாறுவதைக் கவனி :—

நாய் குரைத்தது. ரை

ஏரியில் நீர் குறைந்தது. றை

2. கோடு இட்ட இடத்தில் கீழே கொடுத்துள்ளவற்றுள் தகுந்த சொல்லை அமைத்துப் படி :—

நல்ல, எஜமானி, கண்டு, பெற.

(அ) அந்த வீட்டு ——— நாயினிடம் பிரியமாயிருந்தாள்.

(ஆ) அதற்கு ——— உணவு தருவாள்.

(இ) கழுதை எஜமானியின் பிரியத்தை ——— விரும்பியது.

(ஈ) கழுதை அதை ——— பொறாமைப்பட்டது.

3. நாய் இரவில் குரைப்பதற்குக் காரணம் என்ன ?

4. கழுதைக்கு நாயினிடம் ஏன் பொறாமை ஏற்பட்டது ?

5. தகாத காரியத்தில் தலையிட்டால் என்ன நேரும் ?



# 12. உழவனும் வணிகனும்

1. ஒரு நாள் வணிகன் ஒருவன் அயலூருக்குப் போகப் புறப்பட்டான். அவன் வழியில் களைத்து ஒரு மர நிழலில் தங்கினான். அங்கு ஓர் உழவன் வயலை உழுதுகொண்டிருந்தான். வணிகன், உழவனைப் பார்த்து, "ஐயா, உலகில் உயர்ந்தவர் யார்?" என்று கேட்டான்.

உழவன்: இதில் சந்தேகம் என்ன? உலகில் உழவுத் தொழில் செய்பவரே உயர்ந்தவர். உழவர் இல்லா-விட்டால் மனிதருக்கு நெல், கேழ்வரகு முதலிய தானியங்கள் எப்படிக் கிடைக்கும்? அவை கிடைக்-காவிட்டால், மக்கள் எப்படி உயிர் வாழ முடியும்?

வணிகன்: தானியம் மட்டும் கிடைத்துவிட்டால் போதுமா? வெறுந்தானியத்தைச் சமைத்துச் சாப்பிட முடியுமா? முதலில் உணவுக்கு உப்பு

வேண்டாவா? கறி வகைகள் இல்லாமல் வெறுஞ்-சோற்றை மட்டும் சாப்பிட முடியுமா? கறி சமைக்க மிளகாய், தனியா, மிளகு, பூண்டு முதலியவை வேண்டாவா? இவை எல்லாம் ஒரே ஊரில் விளை-வது இல்லையே! இவை வெவ்வேறு ஊர்களில் கிடைக்கும். இவற்றைத் தருவித்து விற்பவர் வணிகர் அல்லவா? ஆதலால், வணிகரே உயர்ந்தவர்.

2. இதனால் பேச்சு வளர்ந்தது. அவ்விருவரும் வாதிட்டுக்கொண்டேயிருந்தனர். அச்சமயம் ஒருவர் அங்கு வந்தார். அவர் நன்கு கல்வி கற்றவர்; சிறந்த அறிஞர். அவர் அவர்கள் வாதுக்குக் காரணத்தைக் கேட்டு அறிந்தார்.

3. வந்தவர், "நண்பர்களே, நான் சொல்வதைக் கவனியுங்கள்: மனிதர் வேண்டும் எல்லாப் பொருள்-களும் உழவரிடமும் வியாபாரியிடமுமிருந்தே கிடைத்து-விட மாட்டா. மனிதருக்குத் துணி வேண்டும். அதை உங்களால் தர இயலுமா? உழவர்க்குக் கலப்பை, மண் வெட்டி முதலியன யாரிடமிருந்து கிடைக்கின்றன? வர்த்தகருக்குத் தராசு, படிக்கல் முதலியவை வேண்டும். அவற்றை அவரே செய்துகொள்ள முடியுமா? முடியாதே! ஆதலால், ஒவ்வொருவனும் தான் செய்யும் தொழிலைத் தனக்காகவும் பிறர்க்காகவுமே செய்கிறான். 'பிறர் உதவி-யின்றி வாழ முடியாது,' என்னும் எண்ணம் ஒவ்வொரு-வருக்கும் இருக்க வேண்டும். அப்போதுதான் எல்லாரும் சந்தோஷமாய் வாழ முடியும்," என்றார்.

4. இவற்றைக் கேட்ட உழவனும் வணிகனும் உண்மையை அறிந்தனர். அவர்கள், ஒருவர் உயர்ந்தவர் ஒருவர் தாழ்ந்தவர் என்று பேசுவதை விட்டுவிட்டார்கள்.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| வணிகன் | தருவித்து | நண்பர் |
| களைத்து | விற்பவர் | வியாபாரி |
| தங்கு | பேச்சு | இயலும் |
| உயர்ந்தவர் | வளர்ந்தது | கலப்பை |
| சந்தேகம் | வாதிடு | வர்த்தகர் |
| செய்பவர் | கற்றவர் | தராசு |
| பூண்டு(பெ) | அறிஞர் | படிக்கல் |
| விளைவது | வாது | எண்ணம் |
| வெவ்வேறு | காரணம் | தாழ்ந்தவர் |

### பயிற்சி :

1. கோடு இட்ட இடத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்கு நேர் மாறுன சொல்லை அமைத்து எழுது :—

   (அ) கண்ணன் கதவை **மூடினன்**; இராமன் அதை ———.

   (ஆ) சீலன் **நல்லவன்**; மணி ———.

   (இ) கோவிந்தனுக்கு நடராஜன் **விரோதி**; கிருஷ்ணனுக்கு விஜயன் ———.

   (ஈ) **காலையில்** சூரியன் தோன்றுகிறது; ——— சூரியன் மறைகிறது.

2. உழவன் தொழில் என்ன? வணிகன் தொழில் என்ன?

3. உழவன் உழவரை ஏன் உயர்த்திப் பேசினன்?

4. வணிகன் வணிகரை உயர்த்திப் பேசினதற்குக் காரணம் என்ன?

# 13. நரியும் நாரையும்

(கதைப் படம்)




குறிப்பு:—பிள்ளைகள் படங்களையும் அவற்றில் உள்ள குறிப்புக்களையும் பார்த்துக் கதை சொல்லச் செய்தல்.

# 14. வாழும் முறைமை (பாட்டு)

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—'எங்கள்
தாய்' என்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா!—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! 1

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்தஇந்து ஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா! 2

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொலல் பாவம்;
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர். 3

உயிர்க ளிடத்திலன்பு வேணும்;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா! 4

—திரு. சி. சுப்பிரமணிய பாரதியார்

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| முறைமை | ஆன்றோர்கள் | உயர்ச்சி |
| திருநாடு | இந்துஸ்தானம் | மதி |
| அமிழ்து | தாழ்ச்சி | வயிரம் |
| இனியது | | நெஞ்சு |

## பயிற்சி:

1. எதிர்ச்சொல் கூறு:—

   இனியது, தாழ்ச்சி, நிறைய, புகழ், உண்மை, வேணும், மேலோர்.

2. வாழும் முறைமை எது?
3. அரிதல், அறிதல்—இவற்றின் பொருள் என்ன ?
4. நம் ஆன்றோர்கள் தேசம் எது?
5. மேலோர் யார்?
6. நமக்கு இருக்க வேண்டுவன எவை?

# 15. எல்லாரையும் மகிழச் செய்வது எளிதன்று.

1. கோவூரில் ஒரு கிழவர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவர்களிடம் ஒரு கழுதை இருந்தது. அவர்கள் ஒருநாள் அதை விற்கச் சந்தைக்கு ஓட்டிச் சென்றார்கள்.



2. வழியில் ஒருத்தி அவர்களைப் பார்த்து, "இவர்களைப் போன்ற மூடர்கள் உலகத்தில் இருக்க மாட்டார்கள்! கழுதை இருக்க, இவர்கள் ஏன் நடக்க வேண்டும்?" என்றனள்.



3. அது கேட்ட கிழவர் தம் மகனைக் கழுதையின்மேலே ஏற்றிவிட்டுத் தாம் நடந்து சென்றார். அவர்கள் அடுத்த ஊரை அடைந்தபோது, இருவர், "இந்தப் பையன் சிறிதும் மரியாதை தெரியாதவன். வயது சென்ற கிழவர் நடந்து வர, இவன் சுகமாகச் சவாரி செய்கிறானே!" என்றனர்.

4. அதைப் பையன் கேட்டான். 'அவர்கள் சொன்னது சரி,' என்று அவன் எண்ணினான்.



உடனே அவன் கழுதையை விட்டு இறங்கினான்; கிழவரைக் கழுதையின்மேல் ஏற்றித் தான் நடந்து சென்றான். சிறிது தூரம் சென்றபின், எதிரில் ஒருத்தி வந்தாள். அவள், "இக்கிழவன் சிறிதும் இரக்கம் இல்லாதவன். சிறு பிள்ளையை நடந்துவரச் செய்துவிட்டுத் தான் சுகமாகச் சவாரி செய்கின்றானே!" என்றாள்.

5. அவள் கூறியது நியாயம் எனக் கிழவருக்குத் தோன்றியது. உடனே கிழவர் பையனையும் தம் பின் உட்கார வைத்துக்கொண்டார். சிறிது தூரம் சென்றபின், எதிரில் வந்த ஒருவன், "இவர்கள் மிகவும் கொடியவர்கள்! வாயில்லாத பிராணியின்மேல் இருவர் சவாரி செய்கின்றனரே! இவர்கள் ஏன் அதைச் சுமந்து செல்லக் கூடாது?" என்றனன்.





6. உடனே கிழவரும் மகனும் கழுதையின் நான்கு கால்களையும் சேர்த்துக் கட்டினர்; அக்கால்களின் இடையில் ஒரு கழியை நுழைத்தனர்; பக்கத்துக்கு ஒருவராகக் கழியைத் தோளின்மேல் வைத்துக் கழுதையைத் தூக்கிக்-கொண்டு சென்றனர். கழு-தைக்கு அது துன்பமாய் இருந்தது.

7. வழியில் அவர்கள் ஓர் ஆற்றுப் பாலத்தைக் கடந்து செல்ல நேர்ந்தது. அப்போது எதிரில் வந்த சிலர், அவர்களைக் கண்டு கை கொட்டிச் சிரித்தனர். அந்தச் சத்தத்தைக் கேட்ட கழுதை வெருண்டு கால்களை உதைத்துக்கொண்டது. உடனே கயிறு அறுந்து அது ஆற்றில் விழுந்து மடிந்தது.



8. எல்லாரையும் மகிழச் செய்ய விரும்பிய கிழவரும் சிறுவனும் கழுதையை இழந்தனர்.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| எளிது | இருவர் | சேர்த்து |
| அன்று | சிறிதும் | கட்டினர் |
| விற்க | மரியாதை | இடையில் |
| சந்தை | வயது சென்ற | நுழைத்தனர் |
| ஓட்டி | நடந்துவர | தோளின்மேல் |
| ஒருத்தி | சுகமாய் | கடந்து |
| போன்ற | சவாரி | நேர்ந்தது |
| மூடர்கள் | இரக்கம் | கைகொட்டி |
| இருக்கமாட்டார் | செய்துவிட்டு | வெருண்டு |
| ஏற்றிவிட்டு | ஒருவன் | உதைத்துக்கொண்டது |
| தாம் | கொடியவர்கள் | ஆற்றில் |
| அடுத்த | சுமந்து | மடிந்தது |
| அடைந்தபோது | செல்லக்கூடாது | |

## பயிற்சி :

1. கோடு இட்ட இடத்தில் தகுந்த சொல்லை அமைத்து எழுது :—

(அ) கோவூரில்—கிழவர் இருந்தார். (பத்து, ஒரு, பாதி)

(ஆ) அவர்கள் கழுதையை ———ஓட்டிச் சென்றார்கள். (வாங்குவதற்கு, தூக்குவதற்கு, விற்பதற்கு)

(இ) இந்தப் பையன் சிறிதும் ——— தெரியாதவன். (பலம், நடக்க, மரியாதை)

(ஈ) கிழவர் பையனையும் தம் பின்னால்———வைத்துக்கொண்டார். (ஓட, ஆட, உட்கார)

2. கழுதையின்மேல் உட்கார்ந்து சென்ற கிழவர் ஏன் இறங்கிவிட்டார் ?

3. கழுதையின்மேல் இருந்த பையன் ஏன் இறங்கினான் ?

4. கிழவரும் பையனும் ஏன் கழுதையைத் தூக்கிச் சென்றனர் ?

5. இந்தக் கதையால் நமக்கு என்ன தெரிகிறது ?

## விளையாட்டு—2

கீழ் உள்ள கோடுகளில், தகுந்த படத்தின் பெயரைச் சேர்த்துப் படி; பிறகு எழுது :—

1. ——— அழகிய பறவை.
2. ——— பாறைகளால் ஆனது.
3. ——— காட்டில் வாழும் மிருகம்.
4. ——— ஒரு கால் உடைந்திருக்கிறது.
5. ——— தின்றால் பல் கூசும்.
6. ——— சாப்பிட உபயோகப்படுகிறது.
7. ——— வீடுகளில் உள்ள தின்பண்டத்தைத் திருடும்.
8. ——— பாலைக் கொடுத்தாலும் விஷத்தையே தரும்.
9. ——— வீட்டைக் காக்கும்.






# 16. மலை

1. இது ஒரு மலையின் படம். நீ மலையைப் பார்த்திருக்கிறாயா? மலை கல்லாலும் மண்ணாலும் ஆனது. சிற்சில இடங்களில் கல் தெரியாதபடி மண் மூடியிருக்கும். சில இடங்களில் கற்கள் முட்டு முட்டாய்த் தெரியும். அவை **பாறைகள்** எனப்படும். அதிக உயரம் இல்லாத மலை, **குன்று** என்று சொல்லப்படும்.

2. படத்தில் ஒரு மனிதன் நிற்பதைப் பார். அங்கிருந்துதான் மலை தொடங்குகிறது. அந்த இடம் சம நிலத்தைவிடச் சிறிது உயரமாயிருப்பதைக் கவனி. அந்தப் பாகத்துக்கு **மலையடிவாரம்** என்பது பெயர்.

3. மலையின் மிக உயர்ந்த பாகத்தைப் பார். அந்தப் பாகத்துக்கு **மலையுச்சி** என்பது பெயர். மலையுச்சியிலிருந்து, அடிவாரம் வரையில் சரிவாய் அமைந்துள்ள பாகம், **மலைச்சரிவு** என்று சொல்லப்படும்.

அதன் எதிர்ப் பாகத்தைக் கவனி. அது சாய்வு குறைவாய் இருக்கிறது. அது மலையின் செங்குத்தான பக்கம்.

4. படத்தில் சில மலைகள் ஒன்றை அடுத்து ஒன்றாய்த் தொடர்ந்து காணப்படுகின்றன. அவற்றுக்கு மலைத்தொடர் என்பது பெயர். இரண்டு மலைகளுக்கு இடையில் பள்ளம் இருந்தால், அது பள்ளத்தாக்கு எனப்படும். இம்மாதிரி இரண்டு மலைகளுக்கு இடையில் உள்ள தாழ்ந்த பாகம் போக்கு வரவுக்குத் தகுதியாயிருந்தால், அது கணவாய் என்று வழங்கப்படும்.

5. மலைகளால் நமக்குப் பல நன்மைகள் உண்டு: மலைகளின்மேல் புல், புதர், மரம் முதலியவை இருக்கும். அருகில் உள்ள கிராமத்து மாடுகள் அங்குச் சென்று மேயும். மரங்கள் அடுப்பு எரிக்க விறகாக உதவும். மலைகள் உயரமாயிருந்தால், மேகத்தைத் தடுத்து, மழையைப் பெய்விக்கும். ஆறுகள் உண்டாவதற்கும் மலைகள் இடமாயுள்ளன. மலைக்கற்களை உடைத்துச் சாலைகளுக்கு உபயோகிக்கிறார்கள். மலை நமக்கு எத்தனை வகைகளில் உபயோகமாயிருக்கிறது பார்!

### புதிய சொற்கள்:

| | | |
|---|---|---|
| சிற்சில | சரிவாய் | பள்ளத்தாக்கு |
| முட்டு முட்டாய் | அமைந்துள்ள | தகுதி |
| பாறைகள் | மலைச் சரிவு | கணவாய் |
| நிற்பதை | சொல்லப்படும் | மேயும் |
| அங்கிருந்துதான் | சாய்வு | விறகு |
| சமநிலம் | செங்குத்து | மேகம் |
| அடிவாரம் | தொடர்ந்து | பெய்விக்கும் |
| மலை உச்சி | மலைத்தொடர் | |

### பயிற்சி :

1. வினாவின் கீழ்த் தரப்பட்டுள்ள விடை சரியா, தவறு என்பதைச் சொல். தவறாயிருந்தால், சரியான விடையை எழுது :—

(அ) வினா :—மலை எவற்றால் ஆனது ?

விடை :—மலை கல்லாலும் முள்ளாலும் ஆனது.

(ஆ) வினா :—குன்று என்பது எதற்குப் பெயர் ?

விடை :—சிறிய மலைக்குக் குன்று என்பது பெயர்.

(இ) வினா :—மலையின் உச்சியிலிருந்து அடிவாரம் வரையில் உள்ள பாகத்துக்குப் பெயர் என்ன ?

விடை :—'மலைச்சரிவு' என்பது அந்தப் பாகத்துக்குப் பெயர்.

(ஈ) வினா :—மலையின் சரிவு குறைந்துள்ள பக்கத்துக்குப் பெயர் என்ன ?

விடை :—அதற்குப் 'பள்ளத்தாக்கு' என்பது பெயர்.

2. விடை எழுது :—

(அ) 'மலைத்தொடர்' என்பது எதற்குப் பெயர் ?

(ஆ) 'பள்ளத்தாக்கு' என்பது எதற்குப் பெயர் ?

(இ) மலைகளால் ஏற்படும் நன்மைகள் எவை ?



# 17. தகுந்த தண்டனை!

1. பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்றில் சிறுமியர் இருவர் படித்து வந்தனர். அவ்விருவருள் ஒருத்தியின் பெயர் கமலை; மற்ஞெருத்தியின் பெயர் விமலை. இருவரும் துஷ்டச் சிறுமியர்.

2. வகுப்பில் பாடம் நடக்கும் போது, அவர்கள் பாடத்தைக் கவனிப்பதே இல்லை; ஏதாவது துஷ்டத்தனம் செய்துகொண்டேயிருப்பார்கள். அவர்களிடம் எப்போதும் ஒட்டுப்பசையும் வர்ணப் பென்ஸில்களும் இருக்கும். அவர்கள், "இது கழுதை; அருகில் போனல் உதைக்கும். இது நாய்; ஜாக்கிரதை!" என்று பெரிய தாள்களில் பெரிய எழுத்துக்களில் எழுதுவார்கள்; அந்தத் தாள்களில் பசையைத் தடவி, அருகில் இருக்கும் பெண்களின் முதுகுகளில் ஒட்டிவிடுவார்கள்.

3. அதனல், எல்லாப் பெண்களும் அவர்களை வெறுத்தார்கள். ஆனல், அவ்விருவரும் ஒருத்தியை

மற்ருெருத்தி காட்டிக்கொடாமல் இருந்தமையால், மற்றவர் அவர்களை ஒன்றும் செய்ய இயலவில்லை.

4. அவர்கள் வகுப்பில் சரசு, சாரதை என்னும் இரு சிறுமியர் இருந்தனர். அவர்கள் புத்திசாலிகள். அவர்கள் எப்படியாவது கமலைக்கும் விமலைக்கும் புத்தி கற்பிக்க வேண்டும் என்று எண்ணினுர்கள்.

5. ஒரு நாள் சரசு அவர்களுக்கு முன் பக்கம் உட்கார்ந்து, சில அழகிய படங்களை மறைவாக வைத்துக்கொண்டு பார்ப்பது போலப் பாசாங்கு செய்தாள். விமலையும் கமலையும் அவள் வைத்திருந்த படங்களைப் பார்ப்பதில் நோக்கமாயிருந்தனர்.

6. அவர்களுக்குப் பின் புறம் சாரதை உட்கார்ந்தாள். அவள் மெல்ல அவர்களுடைய சடைகளை நன்ருய் முடிந்துவிட்டாள்; அவர்கள் கால்களின் அருகில் ஒரு ரப்பர்ப் பாம்பையும் போட்டு வைத்தாள்.

7. வகுப்பு முடிந்தது. உபாத்தியாயினியார் வெளியே சென்றனர். மாணவியர் எல்லாரும் எழுந்தனர். கமலையும் விமலையும் எழுந்த போது, அவர்கள் காலில் ரப்பர்ப் பாம்பு தட்டுப்பட்டது. அதைக் கண்டவுடனே அவ்விருவரும் "பாம்பு பாம்பு!" என்று கூவிக்கொண்டே ஓட முயன்றனர்; இருவர் சடைகளும் ஒன்ருேடு ஒன்று முடியப்பட்டிருந்ததால், கீழே விழுந்தனர். அது கண்ட சிறுமியர் எல்லாரும் கையைத் தட்டிக்கொண்டே, "தகுந்த தண்டனை! தகுந்த தண்டனை!" என்று நகைத்தனர். விமலையும் கமலையும் அவமானம் அடைந்தனர். அன்று முதல் அவர்கள் மற்றப் பெண்களிடம் குறும்புத்தனம் செய்வதை விட்டுவிட்டார்கள்.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| தகுந்த | காட்டிக்கொடாமல் | உபாத்தியாயினியார் |
| தண்டனை | புத்திசாலி | மாணவி |
| கவனிப்பது | எப்படியாவது | தட்டுப்பட்டது |
| ஒட்டுப்பசை | கற்பிக்க வேண்டும் | முயன்றனர் |
| ஜாக்கிரதை | பாசாங்கு | நகைத்தனர் |
| தாள் | நோக்கம் | அவமானம் |
| தடவி | சடை | குறும்புத்தனம் |

### பயிற்சி :

1. கீழே உள்ள சொற்களில் எழுத்துக்கள் மாறியுள்ளன. அவற்றைச் சரியாக அமைத்து எழுது :—

   டண்தனை—கூடள்ளிபக்ம்—தஷ்துடம்னத்—வரும்இரு-லிசாத்திபு—கள்ண்ணிஎனர்—டிமுந்து—கள்பூவிந்தா.

2. விமலையும் கமலையும் எப்படிப்பட்டவர்கள் ?

3. சரசுவும் சாரதையும் எப்படிப்பட்டவர்கள் ?

4. இந்தக் கதைக்குத் 'தகுந்த தண்டனை!' என்று ஏன் பெயர் வந்தது ?

5. விமலையையும் கமலையையும் வேறு எப்படி அவமானப்படுத்தியிருக்கலாம் ?

# 18. பழமொழிகள்

1. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.
2. அகல உழுவதிலும், ஆழ உழுவதே நல்லது.
3. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
4. ஆடிப் பட்டம் தேடி விதை.
5. இடுவது பிச்சை ; பெறுவது மோட்சம்.
6. ஈயார் இருந்தென்ன, எட்டிமரம் பழுத்தென்ன ?
7. ஈட்டி எட்டின மட்டும் பாயும் ; பணம் பாதாளம் மட்டும் பாயும்.
8. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
9. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்.
10. எய்தவன் இருக்க, அம்பை நோவதேன் ?
11. ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டு இல்லை.
12. ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா ?
13. ஒன்றானாலும் நன்றாகச் செய்.
14. ஓதுவார் எல்லாரும் உழுவார் தலைக்கடையில்.
15. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
16. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்.
17. கெடுவான் கேடு நினைப்பான்.
18. சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து.
19. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
20. பணம் பந்தியிலே ; குலம் குப்பையிலே.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| அடக்கம் | ஆடிப்பட்டம் | ஓதுவார் |
| பெறும் | ஈயார் | தலைக்கடை |
| அகலம் | பாதாளம் | தூற்று |
| ஆழம் | பண்டம் | கெடுவான் |
| உழுவது | ஊட்டி | சிறுமை |
| ஆல் | எய்தவன் | சிலை |
| வேல் | அம்பு | பந்தி |
| உறுதி | அம்பலம் | குலம் |

## பயிற்சி:

1. உனக்குத் தெரிந்த பழமொழிகளை எழுது.
2. 'பழமொழி' என்பதன் பொருள் என்ன ?
3. உழவு சம்பந்தமான பழமொழிகள் எவை?
4. கல்வி சம்பந்தமான பழமொழிகள் எவை ?
5. பொருள் சம்பந்தமான பழமொழிகள் எவை ?
6. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

(அ) ———இருந்தென்ன ?

(ஆ) ———பாதாளம் மட்டும்———.

(இ) உப்பில்லாப்———குப்பையிலே.

(ஈ) ———பாட்டிற்கு———இல்லை.

(உ) ———கேடு நினைப்பான்.

(ஊ) ———வாழ்வே———செல்வம்.

## 19. செந்தலைப் பறவை

1. ஓர் ஊரில் ஒரு தச்சன் இருந்தான். அவன் எப்போதும் கறுப்புத் துணியே உடுத்திருப்பான்; தலையில் சிவப்புத் துணியைக் கட்டியிருப்பான்.

2. ஒரு நாள் ஒரு கிழவர் அவனிடம் வந்து, "அப்பா, என் மிதியடி உடைந்துவிட்டது. ஒரு சிறிய மரத்துண்டு கொடுத்தால், புது மிதியடி செய்துகொள்வேன்," என்றார்.

3. தச்சன் மரத்துண்டுகளை அடுக்கியிருந்த இடத்துக்குப் போனான்; ஒரு பெரிய துண்டை எடுத்தான்; அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான்; 'இது நல்ல மரம். இதைப் பலகைகளாக அறுக்கலாம். இதை ஏன் தர வேண்டும்?' என்று நினைத்தான்.

4. பிறகு அவன் அதைவிடச் சிறிய துண்டு ஒன்றை எடுத்தான்; 'இது கட்டிற்காலுக்கு உதவும். இதையும் தரக் கூடாது,' என்று எண்ணினான்.

5. பின்பு அவன் அதைவிடச் சிறிய துண்டை எடுத்தான்; 'இது கெட்டியான மரம். இது மத்துச் செய்ய உதவும். இதையும் ஏன் தர வேண்டும்?' என்று நினைத்தான்.

6. அவன் கிழவரைப் பார்த்து, "ஐயா, என்னிடம் இப்போது உமக்குத் தரக்கூடிய மரம் இல்லை. மற்றொரு சமயம் வாரும். நல்ல மரமாகத் தருகிறேன்," என்றான்.

7. கிழவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் அவனைப் பார்த்து, "உனக்கு மரத்தின்மேல் இவ்வளவு

ஆசை இருப்பதால், நீ மரத்தைத் தின்றே வாழக்-கடவாய்!" என்று சாபம் கொடுத்-தார்.



8. தச்சன் உடனே ஒரு பறவை-யாய் மாறினன். அந்தப் பறவை-யின் உடல் கருமையாயும், தலை சிவப்பாயும் காணப்பட்டன. அந்தப் பட்சிதான் மரத்தைக் கொத்தித் தின்று வாழ்கிறது. அதுவே மரம் கோத்தி என்னும் பறவை.

### புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| செந்தலை | திருப்பி | வாழக் கடவாய் |
| சிவப்பு | பலகை | சாபம் |
| மிதியடி | கெட்டியான | மாறினன் |
| துண்டு | மத்து | பட்சி |
| அடுக்கி | மற்றொரு | கொத்தி |

### பயிற்சி :

1. கீழே உள்ள சொற்களை அர்த்தம் தரும்படி வரிசைப்-படுத்தி எழுது :—

   (அ) நாள் ஒரு ஒரு அவனிடம் கிழவர் வந்தார்.
   (ஆ) உமக்கு கூடிய மரம் தர இல்லை.
   (இ) கோபம் விட்டது கிழவருக்கு வந்து.
   (ஈ) பறவை கொத்தி மரம் அதுதான் என்னும்.

2. தச்சனிடம் வந்தவர் யார்?
3. தச்சன்மீது அவருக்கு ஏன் கோபம் வந்தது?
4. தச்சன் எப்படிப்பட்டவன்?
5. மரம் கொத்தி ஏன் எப்போதும் மரத்தைக் கொத்திக்-கொண்டேயிருக்கிறது?



## 20. சைக்கில் வண்டி (பாட்டு)

தங்கையேபார்! தங்கையேபார்!
சைக்கில்வண்டி இதுவேபார்! 1

சிங்கார மானவண்டி,
சீமையிலே செய்தவண்டி. 2

இரும்பாலே செய்தவண்டி,
எங்கெங்கும் ஓடும்வண்டி. 3

மாடில்லை குதிரையில்லை;
மாயமாய்ப் பறந்திடும்பார்! 4

தீயில்லை புகையுமில்லை;
தீவிரமாய்ச் சென்றிடும்பார்! 5

காலாலே மிதிப்பதனுல்
கடுவிசையில் போகுதுபார்! 6

ஒன்றன்பின் ஒன்ருக
உருளும்பை தாக்களைப்பார்! 7

அக்காளும் தங்கையும்போல்
அவைபோகும் அழகைப்பார்! 8

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்

குறிப்பு :—பைதாக்கள் - சக்கரங்கள்.

## விளையாட்டு—3

படத்தைக் குறிக்காத வாக்கியங்களைத் தனியே எழுது :—

1. மேசையின்மேல் பூட்டும் சாவியும் இருக்கின்றன.
2. ஒரு பெண் தையல் வேலை செய்கிறாள்.
3. பையன் தலையில் குல்லா இருக்கிறது.
4. எருது வண்டி இழுக்கும்.
5. இது எங்கள் வகுப்பு அறை.
6. பையன் மேஜைமேல் புத்தகம் வைக்கிறான்.
7. இந்தக் கோபுரம் உயரமானது.
8. மூட்டையின்மேல் எலி இருக்கிறது.
9. இது ஒரு மா மரம்.
10. கிளியின் நிறம் பச்சை.
11. பெட்டியின் உள்ளே புத்தகம் இருக்கிறது.
12. ஆண் கோழிக்குச் சேவல் என்பது பெயர்.
13. ஆசிரியர் பையனைக் காட்டுகிறார்.
14. பெட்டி மூடப்பட்டிருக்கிறது.













## 21. தண்ணீரின் சுய சரிதை

ஒரு நாள் கந்தன் பந்தாடினான். அவனுக்குத் தாகமாயிருந்தது. வீட்டிற்குள் சென்றான்; பானையில் இருந்த தண்ணீரை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் முகந்தான்; குடிப்பதற்கு வாயருகில் கொண்டுபோனான். அப்போது தண்ணீர் 'கலீர்' என்று சிரித்தது.

கந்தன் அதைக் குடிக்கவில்லை; பாத்திரத்தை மேசைமீது வைத்தான்; அருகில் இருந்த பீடம் ஒன்றில் உட்கார்ந்தான்; "தண்ணீரே, நீ ஏன் சிரித்தாய்?" என்று கேட்டான்.

தண்ணீர் :—நீ என்னைத் தினந்தோறும் குடிக்கிறாயே! என்னைப்பற்றி நீ ஒன்றும் தெரிந்துகொள்ளவில்லையே என்று எண்ணிச் சிரித்தேன்.

கந்தன் :—உன்னைப்பற்றி எனக்கு என்ன தெரிய வேண்டும்? நீ யார் என்பதை நான் அறிவேன்.

ஆனால், நீ எப்படி உண்டானாய் என்பது எனக்குத் தெரியாது. உன் சரித்திரத்தைச் சொல்; கேட்கிறேன்.

**தண்ணீர்** :—சொல்லுகிறேன் ; கேள் : நான் முதலில் கடலில் இருந்தேன். வெப்பக் காற்று என்னைக் குடித்தது. அப்போது நான் அதன் வயிற்றில் நீர் ஆவியாயிருந்தேன்.

**கந்தன்** :—பிறகு என்ன நேர்ந்தது?

**தண்ணீர்** :—அந்த வெப்பக் காற்று மிகவும் இலேசாய் இருந்தது. ஆகையால், அது பூமியை விட்டு மெல்ல மெல்ல உயரக் கிளம்பிச் சென்றது. காற்று மேலே செல்லச் செல்ல, அதன் வயிற்றில் ஆவியாய் இருந்த நான் மறுபடியும் தண்ணீர்த் துளிகளாய் மாறினேன். மேலும் உயரத்தில் சென்ற போது நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்துவிட்டதால், காற்று அவற்றைத் தாங்கிச் செல்ல முடியாமல் விட்டுவிட்டது.

**கந்தன்** :—அப்போது என்ன நேர்ந்தது?

**தண்ணீர்** :—என்ன நேர்ந்ததா ? நீர்த்துளிகள் மழை என்னும் பெயருடன் பூமியை அடைந்தன. நான் மழை நீராய் இந்த ஊர்க் குளத்தில் வந்து விழுந்தேன். உன் தாயார் என்னைக் குடத்தில் முகந்துகொண்டு வந்தார். நீ என்னைக் குடிக்கப்போகிறாய்.

**கந்தன்** :—பேஷ்! உன் கதை மிக நன்றாய் இருக்கிறதே! உன் கதையைக் கேட்ட பிறகு, உன்னிடம் எனக்குப் பிரியம் அதிகமாகிவிட்டது. ஆகையால்,

உன்னை விட்டுவிட எனக்கு மனம் இல்லை. இதோ உன்னைக் குடிக்கிறேன்! [குடிக்கிறான்.]

### புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| சுய சரிதை | முகந்தான் | இலேசாய் | ஒன்று சேர்ந்து |
| தாகம் | என்னைப்பற்றி | கிளம்பி | தாங்கி |
| கண்ணாடி | சரித்திரம் | ஆவி | முடியாமல் |
| பாத்திரம் | வெப்பம் | துளி | பேஷ் |
| | நீராவி | | |

### பயிற்சி :

1. கீழே தரப்பட்டுள்ள சொற்களைத் தகுந்த இடத்தில் அமைத்து எழுது :—

[இருந்த — குடிப்பதற்கு — கலீர் — நீர்த்துளிகள் — எப்படி — கடலில்]

(அ) அப்போது தண்ணீர் ——— என்று சிரித்தது.

(ஆ) அதை ——— வாயருகில் கொண்டு போனான்.

(இ) அருகில் ——— நாற்காலியில் உட்கார்ந்தான்.

(ஈ) நீ ——— உண்டானாய் என்பது தெரியாது.

(உ) நான் முதலில் ——— இருந்தேன்.

(ஊ) ——— மழை என்னும் பெயருடன் பூமியை அடைந்தன.

2. நீர்த்துளி முதலில் எங்கே இருந்தது ?

3. நீர்த்துளி நீராவியாய் மாறிய போது எங்கே இருந்தது ?

4. நீர்த்துளி ஆகாயத்திலிருந்து பூமியின்மீது விழும்போது அதற்கு என்ன பெயர் வழங்குகிறது ?



147809.

## 22. நவராத்திரி

1. உன் பள்ளியில் நவராத்திரிக்குப் பத்து நாட்கள் விடுமுறை விடுகிறார்கள் அல்லவா? ஏன்? அவ்விடுமுறை நவராத்திரி விழாக் கொண்டாடுவதற்காகவே விடப்படுகிறது என்பதை நீ அறிவாய்.

2. புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் பத்து நாட்கள் வரையில், வடநாட்டில் தசராப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. ‘தசரா’ என்பதற்குப் ‘பத்து இரவு’ என்பது பொருள். அந்தப் பத்து நாட்கள் வரையில் தென்னாட்டில் நவராத்திரி என்னும் விழாக் கொண்டாடப்படுகிறது. ‘நவராத்திரி’ என்பதற்கு ‘ஒன்பது இரவு’ என்பது பொருள். பத்தாவது நாள் விஜய தசமி எனப்படும்.

3. அந்தப் பத்து நாட்களையும் இந்துக்கள் புண்ணிய நாட்கள் என்று எண்ணுகிறார்கள். அப்-

போது மக்கள் நல்ல நூல்களைப் படிக்கின்றார்கள்; கடவுளை வழிபடுகின்றார்கள். கோவில்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. பெண்டிர்கள் வீடுகளை அழகு செய்து பொம்மைக் கொலு வைப்பார்கள்; சூரியன் மறைந்த பின் கொலுவுக்குப் பூசை செய்வார்கள்.

4. நவராத்திரி கொண்டாடப்படும் ஒன்பது நாட்களிலும் மூன்று தெய்வங்களுக்குப் பூசை செய்வது வழக்கம். முதல் மூன்று நாட்களில் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்களில் இலட்சுமிக்கும், பின் மூன்று நாட்களில் ஸரஸ்வதி என்னும் கலை மகளுக்கும் பூசை செய்யப்படும்.

5. ஒன்பதாம் நாள் ஆயுத பூசை எனப்படும். அன்று மாணவ மாணவிகள் தங்கள் புத்தகங்களை அழகாக அடுக்கி வைத்துப் புஷ்பங்களை இட்டுப் பூசை செய்வார்கள். தொழிலாளிகள் தாங்கள் தினந்தோறும் உபயோகிக்கும் ஆயுதங்களைச் சுத்தம் செய்து, அவற்றிற்குச் சந்தனம் பூசி மலர் இட்டு வணங்குவார்கள். அரசர் தம் போர்க்கருவிகளைப் பூசிப்பர்.

6. விஜய தசமி மிகச் சிறந்த தினம். அன்று எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும், அது வெற்றி பெறும். சிறுவர் சிறுமியரைப் பள்ளியில் வைப்பதற்கு அதுவே சிறந்த நாள். ஆயுதப் பயிற்சி ஆரம்பிப்பதற்கும் அதுவே ஏற்ற நாள். அரசர்கள் அன்று சிறப்பாக ஊர் வலம் செல்வார்கள். மைசூர் இராச்சியத்தில் நடைபெறும் தசரா ஊர் வலம் மிகவும் பிரசித்தி பெற்றது.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| நவராத்திரி | வழிபடு | பூசிப்பர் |
| விடுமுறை | நடைபெறும் | சிறந்த |
| விழா | பெண்டிர் | தொடங்கு |
| தசரா | கொலு | வெற்றி |
| பண்டிகை | ஆயுதம் | பயிற்சி |
| கொண்டாடு | மாணவன் | ஆரம்பம் |
| புண்ணியம் | தொழிலாளி | ஊர் வலம் |
| நூல்கள் | வணங்கு | பிரசித்தி |
| | போர்க்கருவி | |

## பயிற்சி :

1. எதிர்ப் பதங்கள் எழுது :—

   இரவு, வடநாடு, நல்ல நூல், பெண்டிர், அழகு, மறைந்த பின், மாணவன்.

2. விடை எழுது :—

   (அ) நாம் கொண்டாடும் நவராத்திரி விழாவுக்கு வடநாட்டில் வழங்கும் பெயர் என்ன ?

   (ஆ) நவராத்திரி எந்த மாதத்தில் கொண்டாடப்படும் ?

   (இ) 'விஜய தசமி' என்பது எதற்குப் பெயர் ?

   (ஈ) நவராத்திரி விழா எப்படிக் கொண்டாடப்படுகிறது ?

   (உ) 'ஆயுத பூசை' என்னும் பெயருக்குக் காரணம் என்ன ?

   (ஊ) உன் வீட்டில் நவராத்திரிக் கொலு வைப்பது உண்டா ? நீ நவராத்திரிக் கொலுவைப் பார்த்திருக்கிறுயா ?



## 23. சுத்தம்

1. 'சுத்தம் சோறு போடும்,' என்பது பழமொழி. பறவைகளும் பல முறைகளால் தங்கள் உடல்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதை நாம் பார்க்கிறோம். மனிதராகிய நாமும் நம் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டாவா!

2. தினந்தோறும் காலையில் நாம் நம் பற்களை நன்றாகத் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். பற்களைச் சுத்தம் செய்யாவிடில், வாய் துர்நாற்றம் வீசும்; மற்றவர்கள் நம் அருகில் இருந்து பேச விரும்ப மாட்டார்கள். பல் அசுத்தமாயிருந்தால், பல் நோய்களும் நம்மை நாடும். ஆதலால், பற்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

3. சிலர் தம் நகங்களை நீளமாய் வளரவிடுகின்றனர். அதனுல், பல கெடுதிகள் ஏற்படும்: கண்ணில் விரல் தவறிப் பட்டால், கண்ணுக்குக் கெடுதி ஏற்படும். நகம் நீண்டிருந்தால், அதன் இடையில் அழுக்குச் சேரும். அது நம் உணவுடன் கலந்து வயிற்றினுள் போகும். ஆதலால், நகங்களை வளர விடக் கூடாது.

4. சிலர் தலையில் ஈரும் பேனும் நிறைந்திருப்பதைப் பார்க்கிறோம். தலையைச் சுத்தமாய் வைத்திராமையே இதற்குக் காரணம். தலையில் பேன் அதிகரித்தால், சிரங்கு உண்டாகும். அதனுல் துர்நாற்றம் வீசும். அது பிறர்க்கு அருவருப்பாய் இருக்கும். ஆதலால், நாம் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும். தலை மயிரைத் தினந்தோறும் எண்ணெய் தடவிச் சீவி விட வேண்டும்.

5. நம் உடம்பிலிருந்து வியர்வை வெளிப்படுகிறது. அது உலர்ந்து அழுக்காய் மாறி, உடம்பில் தங்குகிறது. அழுக்கைத் தினந்தோறும் நீக்காவிட்டால், கெட்ட நாற்றம் வீசும். அதை மற்றவர் வெறுப்பர். ஆகையால், தினந்தோறும் காலையில் உடலை நன்ருகத் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

6. சிலர் ஒரே துணியைப் பல நாட்கள் வரையில் தோய்க்காமல் கட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். சுத்தமாய் இருப்பவர்கள் அழுக்குத் துணியை உடுத்தமாட்டார்கள். அவர்கள் அழுக்கு உடை உடுப்பவரிடம் நெருங்கவும் அஞ்சுவார்கள். ஆதலால், நாம் நம் ஆடையை அழுக்கு நீங்கத் தோய்த்துக் கட்டிக்கொள்ள வேண்டும்.

**7.** இப்படிச் சுத்தமாயிருந்தால், நோய்கள் வாரா ; மற்றவரும் நம்முடன் நெருங்கிச் சந்தோஷமாய்ப் பழகுவர்.

'கூழானாலும் குளித்துக் குடி;
கந்தையானாலும் கசக்கிக் கட்டு.'

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| சுத்தம் | கெடுதி | சீவு |
| முறைகள் | ஈர் | அழுக்கு |
| தேய்த்து | பேன் | வெறுப்பு |
| துர்நாற்றம் | சிரங்கு | உடுத்து |
| நோய்கள் | அருவருப்பு | நெருங்கி |
| நீளமாய் | எண்ணெய் | அஞ்சு |
| வளரவிடு | நீராடு | தோய்த்து |
| | தடவு | |

## பயிற்சி :

1. கோடு இட்ட இடத்தில் காரியத்தைத் தெரிவிக்கும் சொல்லை அமைத்து எழுது :—

(உ-ம்.) அவன் பழம் வாங்கினான்.

(அ) அவன் சோறு ———.

(ஆ) அவன் பாடம் ———.

(இ) அவன் பந்து ———.

(ஈ) அவன் தண்ணீர் ———.

2. விடை எழுது :—

(அ) நாம் ஏன் பற்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் ?

(ஆ) நகங்களை நீளமாக வளரவிடுவதால் ஏற்படக்கூடிய தீமை என்ன ?

(இ) தலையில் சிரங்கு வரக் காரணம் என்ன ?

(ஈ) சுத்தமாயிருப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

# 24. வீட்டு மிருகங்கள்

1. 'மிருகங்கள்' என்பவை எவை? நான்கு கால்களை உடைய பிராணிகள் எல்லாம் மிருகங்களே. அவை குட்டி போட்டுப் பால் கொடுக்கும். மிருகங்களுள் இரு வகை உண்டு: வீடுகளில் வளர்க்கப்படும் ஆடு, மாடு, குதிரை முதலியவை ஒரு வகை. இவை வீட்டு மிருகங்கள் எனப்படும். காட்டில் வாழும் சிங்கம், புலி, கரடி முதலியவை காட்டு மிருகங்கள். இப்பாடத்தில் முக்கியமான வீட்டு மிருகங்களைப் பற்றிப் படிப்போம்:

## மாடுகள்

2. மாடுகளுள் இரண்டு வகை உண்டு: அவை பசு மாடு, எருமை மாடு என்பவை. பசு மாடுகளுள் ஆணுக்கு எருது என்பது பெயர்; பெண் மாடு பசு எனப்படும். எருது, ஏர் உழவும், கவலையடிக்கவும், வண்டி இழுக்கவும் உதவும். பசு, நமக்குப் பால் தருகிறது. பாலிலிருந்து தயிர், வெண்ணெய், நெய் முதலிய பொருள்கள் கிடைக்கின்றன.





3. எருமை மாடுகளுள் ஆணுக்குக் கடா என்றும், பெண்ணுக்கு எருமை என்றும் பெயர்கள் வழங்குகின்றன. கடா மாடு, ஏர் உழவும், வண்டி இழுக்கவும் உதவும்.

## ஆடுகள்

4. ஆடுகள், வெள்ளாடு ,செம்மறியாடு, பள்ளாடு, குறும்பாடு எனப் பல வகைப்படும். வெள்ளாடு புல்லும்



தழையும் தின்னும். வெள்ளாடுகளுள் ஆணை மோத்தை என்றும், பெண்ணை மறிக்கை என்றும் வழங்குவர். அவ்விரண்டுக்கும் தலையில் கொம்புகள் உண்டு. நமது நாட்டில் வெள்ளாடுகள் மாமிசத்துக்காகவும், தோலுக்காகவும், பாலுக்காகவும் வளர்க்கப்படுகின்றன. வெள்ளாட்டின் பால் உடம்புக்கு மிக நல்லது.

5. செம்மறி ஆட்டின் உடலில் மயிர் மிகவும் அடர்த்தியாய் இருக்கும். செம்மறி ஆடுகளுள் ஆணைத் தகர் என்றும், பெண்ணை மறி என்றும் வழங்குவர். ஆண் ஆட்டுக்கு மட்டும் தலையில் கொம்புகள் இருக்கும். பெண் ஆட்டுக்குக் கொம்புகள் இரா. இவைகளும் நமது நாட்டில் பாலுக்காகவும், மாமிசத்துக்காகவும், தோலுக்காகவும், உரோமத்துக்காகவும் வளர்க்கப்படுகின்றன.



## குதிரை

6. குதிரை, பார்ப்பதற்கு அழகாயிருக்கும். அது கொள்ளும் புல்லும் தின்னும். குதிரையின் குளம்புகள்,

ஆடு மாடுகளின் குளம்புகளைப் போலப் பிளவுபட்டு இரா. குதிரைக்குக் கொம்புகளும் இல்லை. குதிரை வேகமாய் ஓடும். குதிரை வண்டி இழுக்கவும், சவாரி செய்யவும் உபயோகப்படுகின்றது. சில நாடுகளில் அது ஏர் உழவும், மூட்டை சுமக்கவும் உபயோகமாகின்றது.



கழுதைகள்

7. கழுதை, குதிரை இனத்தைச் சேர்ந்த மிருகம். அதன் குளம்புகளும் பிளவுபட்டிரா. கழுதையின் முக்கியத் தீனி புல். கழுதைகள் நமது நாட்டில் மூட்டை சுமக்க உதவுகின்றன. கழுதைகளில் கோவேறு கழுதை என்பது ஒரு வகை. கோவேறு கழுதைகள் வண்டி இழுக்க உதவுகின்றன. கழுதை உதைக்கும் குணம் உடையது.



நாய்

8. நாய் நன்றியுள்ள பிராணி. அது மோப்பம் பிடிக்கும் குணம் உடையது. ஆதலால், அதை வேட்டை பிடிக்கவும், வீட்டைக் காக்கவும் நாம் வளர்க்கிறோம். மாமி-



சமே அதன் முக்கிய ஆகாரம். எலும்பைக் கடிப்பதில் நாய்க்குப் பிரியம் அதிகம்.



### பூனை

9. பூனை சுத்தமான பிராணி. அதற்கு இரவில் கண் நன்ருகத் தெரியும். பூனையை நாம் வீடுகளில் எலி பிடிப்பதற்காகவே வளர்க்கிருேம். பூனையும் மாமிச பக்ஷணியே.

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| மிருகம் | மோத்தை | மறி | மோப்பம் |
| பிராணி | மறிக்கை | உரோமம் | வேட்டை |
| கவலை (கபிலை) | கொம்பு | கொள்ளு | காக்க |
| தயிர் | மாமிசம் | தீனி | ஆகாரம் |
| வெண்ணெய் | தகர் | நன்றி | பிரியம் |

பயிற்சி :

1. விடை எழுது :—
   (அ) 'மிருகம்' என்பது என்ன ?
   (ஆ) பசுவால் நமக்கு என்ன நன்மை ?
   (இ) ஆடுகள் எத்தனை வகைப்படும் ?
   (ஈ) ஆடுகள் என் வளர்க்கப்படுகின்றன ?
   (உ) கழுதையின் குணம் யாது ?
   (ஊ) நாய் நல்லதா, பூனை நல்லதா ? ஏன் ?
2. கோடிட்ட இடங்களில் பிறைக்குறிகளுள் இருக்கும் சொற்களில் ஏற்றவைகளை அமைத்துப் படி :—
   (அ) உழவன் ஏர் ——— ——— ஓட்டிச் சென்ருன். (ஆடுகளை, உழுவதற்கு, எருதுகளை, இழுக்க)
   (ஆ) ஆடு ——— மேய ——— சென்றது. (தீனி, புல், வீட்டுக்கு, தழை, தோட்டம்)
3. தவற்றைத் திருத்தி எழுது :—
   (அ) அது பசு மாடு, எருமை மாடு என்பது.
   (ஆ) குதிரை கொம்புள்ள மிருகங்கள்.
   (இ) நாய் நன்றியற்ற பிராணிகள்.
   (ஈ) கழுதைகள் மூட்டை சுமக்க உதவுகிறது.

## 25. கிராம உத்தியோகஸ்தர்கள்

மணி :—அப்பா, நீங்கள் வெளியே சென்றிருந்த போது உங்களைத் தேடிக்கொண்டு ஒருவர் வந்தார். நீங்கள் வீட்டில் இல்லை என்றேன். அவர் நீங்கள் வந்த பின் 'மணியக்காரர் வந்து போனார்' என்று சொல்லும்படி கூறிச் சென்றார். மணியக்காரர் என்பவர் யார், அப்பா ?

தந்தை :—மணியக்காரர் என்பவர் நம் கிராமத்துக்கு அதிகாரி.

மணி :—அவரை அதிகாரி ஆக்கினவர் யார் ? அவர் செய்யும் வேலைகள் என்ன ?

தந்தை :—அவரை அரசாங்கத்தார் அதிகாரியாக நியமித்திருக்கின்றனர். அவர் நம்மிடம் வரிப்பணம் வசூலிப்பார்; கிராமத்தில் ஏற்படும் சிறிய வழக்குகளை விசாரிப்பார்; பிறப்பு இறப்புக்களைக் (ஜனன மரணம்) குறிப்பார். இவைகளே அவருடைய வேலைகள்.

மணி :—'வரிப்பணம்' என்பது என்ன ? அதை அவர் வசூலித்து என்ன செய்வார் ?

தந்தை :—நாம் அனுபவிக்கும் நிலங்களுக்கு நாம் அரசாங்கத்துக்குப் பணம் செலுத்த வேண்டும். அதுவே 'வரிப்பணம்' எனப்படும். அதை அவர் வசூலித்து அரசாங்கத்துக் கஜானாவுக்கு அனுப்புவார்.

மணி :—அவருக்கு உதவி புரிய வேறு உத்தியோகஸ்தர்கள் உண்டா ?

தந்தை :—ஆம், உண்டு. கணக்கப்பிள்ளை என்பவர் அவருக்கு உதவி செய்கிறார். அவர் நம் கிராமத்தில் உள்ள நிலங்களின் அளவுகளைக் குறித்துள்ள புத்தகம் ஒன்று வைத்திருப்பார் ; நிலங்களின் அளவுக்குத் தக்கபடி அவற்றின் சொந்தக்காரர் செலுத்த வேண்டிய வரிப்பணம் இவ்வளவு என்னும் கணக்கும் வைத்திருப்பார் ; அதைப் பார்த்து அவரவர் செலுத்த வேண்டிய தொகையை அறிவிப்பார். மணியக்காரரும், கணக்கப்பிள்ளையும் கிராமத்தின் அரசாங்க வேலைகளைக் கவனிப்பவர்கள் ஆவார்கள். ஆகையால், அவர்களுக்குக் கிராம உத்தியோகஸ்தர்கள் என்பது பெயர்.

மணி :—அவர்களைத் தவிர, வேறு கிராம உத்தியோகஸ்தர்களும் உண்டோ ?

தந்தை :—இல்லை. ஆனால், அவர்களுக்கு உதவி புரிவதற்குச் சில வேலைக்காரர்கள் உண்டு. தலையாரி என்பவன் ஒருவன். அவன் இரவில் ஊரைச் சுற்றிக் காவல் காப்பான் ; கணக்கப்பிள்ளை நிலம் அளக்கும் போது அவருடன் இருந்து அளப்பான் ; மணியக்காரரும் கணக்கப்பிள்ளையும் இடும் அரசாங்க வேலைகளைச் செய்வான். அவனைத் தவிர, வெட்டியான், தண்ணீர் கட்டி முதலிய வேலைக்காரர்களும் இருப்பார்கள்.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| தேடு | அரசாங்கத்தார் | விசாரி |
| மணியக்காரர் | வரிப்பணம் | அனுபவி |
| அதிகாரி | வசூலி | கஜானா |
| ஆக்கினவர் | வழக்கு | அள |

## பயிற்சி :

1. விடை எழுது :—

(அ) 'மணியக்காரர்' என்பவர் யார்? அவர் வேலை என்ன?

(ஆ) 'வரிப்பணம்' என்பது என்ன? அதை நாம் ஏன் செலுத்த வேண்டும்?

(இ) கணக்கப்பிள்ளையின் வேலை என்ன?

(ஈ) வெட்டியான், தலையாரி என்பவர் யார்? அவர்கள் வேலை என்ன?

2. கீழ் வருவனவற்றை இல்லை என்னும் பொருள் தரும்படி மாற்றி எழுது :—

(உ-ம்.) அவன் வந்தான். (உண்டு என்பது)
அவன் வரவில்லை. (இல்லை என்பது)

(அ) மணியக்காரர் கூறினார்.

(ஆ) அவர் வரிப்பணம் வசூலிப்பார்.

(இ) அரசாங்கத்துக்குப் பணம் செலுத்த வேண்டும்.

(ஈ) கணக்கப்பிள்ளை உதவி புரிவார்.

3. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்துப் படி :—

(அ) நான் வந்த ——— தம்பி வந்தான்.

(ஆ) பொழுது ——— முன் படுக்கையை ——— எழுந்திரு.

(இ) ஆகாயத்தில் ——— பறக்கின்றன.

(ஈ) மரத்தில் ———வும் இல்லை; ———ம் இல்லை.

# 26. குரங்கும் சக்கிலியும்

(கதைப் படம்)

படங்களைப் பார்த்து, அவற்றைப் பற்றிய விஷயங்களையும் படித்துக் கதையைச் சொல்லு :—





## 27. இரயில் வண்டி (பாட்டு)

போகலாம் வருவாய் ஊருக்கு ;
புகைவண்டி போம்மணி ஆறுக்கு. 1

போபோ முன்னால் புறப்பட்டு ;
போய்வாங் கிரண்டு டிக்கட்டு. 2

ஸ்டேஷன் மேடையில் கூட்டம்பார் !
சீக்கிரம் நமக்கும் இடத்தைப் பார்! 3

தள்ளிக் கொண்டே ஏறாதே ;
சண்டைக்கு வழியைத் தேடாதே. 4

போர்ட்டர் இரண்டாம் மணியடித்தார் ;
போஎனக் கார்டும் கொடியசைத்தார். 5

கூகூ கூவெனக் கூச்சலிட்டுக்
குப்குப் குப்பெனப் புகைவிட்டு 6

புறப்பட் டதுநம் புகைவண்டி
போக்கில் வல்ல இரயில்வண்டி. 7



## விளையாட்டு—4

எழுத்துக்களை வரிசைப்படுத்திச் சொல்லாக்கு :—

| | |
|---|---|
| கைங்ளள்உ | ய்காக்லில்நெ |
| ன்ண்வஞு | ம்ண்ணகி |
| ய்ங்தேகா | காய்க்சணிபூ |
| கம்ட்டஒ | துகைக்தி |
| குங்குர | யன்சூரி |
| ண்டிவயிரல் | ட்கடுக்டி |
| மம்ரட்டிகைகா | புடிண்வகை |
| டைன்மேஷஸ்டே | டர்ட்ர்போ |
| பவாப்ழைம்ழ | காபுலடங்ய் |
| மலிப்ல்பூகை | தெம்மன்ரனே |

2334